*1972 டிசம்பர் 15]*

பதனியிலிருந்து இனிப்பு வகைகள் தயாரிப்பு

* 208 வினு—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவுக்கு விடையளிப்பாரா—

பதனியில் இருந்து சாக்லட், பெப்பர்மிண்ட் முதலிய பொருள்கள் செய்யும் குடிசைத் தொழில்கள் அரசாங்கத்தாரால் எந்தெந்த இடங்களில் நடத்தப்பட்டு வருகின்றன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பதனியிலிருந்து சாக்லட், பெப்பர்மிண்ட் முதலிய பொருள்களைத் தயாரிக்கும் தொழில் கிராமத் தொழிலாக கீழ்வரும் இடங்களில் நடத்தப்படுகிறது:

செங்கற்பட்டு மாவட்டம், மாதவரத்திலுள்ள குமரப்பாபுரம் (சாக்லட், பெப்பர்மின்ட், பனங்கற்கண்டு ஆகியவை இங்கு தயாரிக்கப்படுகின்றன).

திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள திருச்செந்தூர் (பனங்கற்கண்டு தயாரித்தல்).

மதுரை மாவட்டத்திலுள்ள வத்தலகுண்டு (சர்பத், பழரசம், பழப்பாகு தயாரித்தல்).

திரு. என். கிட்டப்பா: மதுவிலக்கு ஒத்திவைக்கப்பட்ட காரணத்தினுல் பதநீர் கள்ளாக மாற்றப்படுவது வெகுவாகக் குறைந்துவிட்டது என்பதை அறிய முடியும். எனவே, பதநீரைக் கொண்டு ஜீனி தயாரிக்கும் ஒரு முறை இருக்கிற காரணத்தினுல் ஜீனி பற்றுக்குறையைப் போக்குவதற்கு பதநீரை உபயோகப்படுத்துவதற்கு அரசு ஆலோசிக்க முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பதநீரிலிருந்து சர்க்கரைதான் தயாரித்து வந்தார்கள். இதிலிருந்து தயாரிக்கப்படும் ஜீனிக்கும், கரும்பிலிருந்து தயாரிக்கப்படும் ஜீனிக்கும் உற்பத்திச் செலவில் வித்தியாசம் இருக்கிறது. பதநீரிலிருந்து தயாரிக்கப்படும் ஜீனிக்கு உற்பத்திச் செலவு ரூ. 1-50-க்கு மேலே ஆகிறது. அதை மார்க்கெட்டில் விற்பது என்று சொன்னுல் மக்களுக்கு சல்லிசாகக் கொடுக்க முடியாது. அதன் காரணமாக அதற்காக ஏற்படுத்தப்பட்டிருந்த மூன்று இயந்திர சாலைகளும் இப்பொழுது மூடப்பட்டிருக்கின்றன. ஆகவே, இப்பொழுது பொது மார்க்கெட்டில் விற்கப்படும் நிலை பதநீரினுல் தயாரிக்கப்படும் சர்க்கரைக்கு இல்லை.

திரு. தி. சி. ஆ. சிவப்பிரகாசம்: பதநீரிலிருந்து தயார் செய்யப்படுகின்ற சாக்லட், பெப்பர்மிண்ட் முதலிய பொருள்களுக்கு எக்ஸ்போர்ட் மார்க்கெட் இருக்கிறதா என்று அமைச்சர் அவர்கள் சொல்வார்களா? இதற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: பதநீரிலிருந்து உற்பத்தி செய்த சர்க்கரையை மார்க்கெட்டில் விற்க முடியாத ஒரே காரணத்தினால் இதை என்ன செய்வது என்று சொல்லி, இருந்த 25 டன் சர்க்கரையை சாக்லட் ஆகவும், பழ ரசம், பாம் கோலா என்ற பானமாகவும் தயார் செய்து இங்குள்ள காதி விற்பனை நிலையத்தில் வைத்து அவைகளை விற்றார்கள். இப்பொழுது அந்த ஜீனி குறைந்து விட்டது. மேலும் இப்பொழுது பதநீர் இறக்குவதற்கும் செலவு அதிகமாக ஆகிறது. காரணம், பதநீர் இறக்குகின்ற தொழிலாளிகளுக்கு முன்பு கூலி ரூ. 3.50 ஆக இருந்தது, இப்பொழுது மது விலக்கை ஒத்திவைத்த பிறகு ரூ. 7 ஆக உயர்ந்துவிட்ட காரணத்தினால், அந்த அளவுக்குப் பதநீர் சர்க்கரை உற்பத்தி செய்வது என்றால் கூட, அதனுடைய உற்பத்திச் செலவு அதிகமாக ஆகின்ற காரணத்தினால், உள்ளூர் மார்க்கெட்டிலேயே விற்பது கடினமாக இருக்கும். வெளி மார்க்கெட் ஏற்படுகின்ற அளவுக்கு உற்பத்தி செய்ய முடியுமா என்ற யோசனையும் இருக்கிறது. இப்பொழுது சர்க்கரை இல்லாத காரணத்தினால் கூட இது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது.

*Taking over of Temples*

* 209. *Q.*—Thiru N. DENNIS: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state—

(*a*) whether any financial limit has been prescribed for taking over temples by the Hindu Religious and Charitable Endowments Department; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன்: (அ) இல்லை.

(இ) கேள்விக்கு இடமில்லை.

திரு. என். டென்னிஸ்: வரையறுக்கப்பட்ட நிதிநிலை இருந்தும் சில ஆலயங்கள் இத்துறையினரால் மேற்கொள்ளப்படாமல் இருக்கின்றன என்பதை அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.